Ontario

சுகாதார அமைச்சு

# கோவிட்-19 தடுப்பூசி போட்ட பின்பு

Version 2.0 மார்ச் 29, 2021

## அடுத்த சில நாட்களில் எனக்கு என்ன நடக்கலாம்?

- பொதுவான பக்கவிளைவுகள் பின்வருவனவற்றை உட்படுத்தும்: வலி, சிவப்பு நிறமாதல், ஊசிபோட்ட இடத்தில் வீக்கம், களைப்பு, தலைவலி, உடம்பு வலி, குளிர், மூட்டுவலி, மெல்லிய காய்ச்சல்.
- மோசமான பக்கவிளைவுகள் அரிதாகவே நடக்கும். ஊசிபோட்ட மூன்று நாட்களுக்குள் பின்வரும் எதிர்விளைவுகள் ஏதாவது ஏற்பட்டால், உங்கள் மருத்துவரை அல்லது தாதியை (நர்ஸ்) அழையுங்கள் அல்லது அருகிலுள்ள அவசர சிகிச்சை நிலையத்துக்கு செல்லுங்கள்: தோலில் தடிப்புகள், முகம் அல்லது வாய் வீங்குதல், மூச்சுவிடுவதில் சிரமம், மிகவும் வெளிரிய நிறத்துடன் கூடிய மோசமான அரைத்தூக்கம், உயர் காய்ச்சல் (40°C க்கு மேல்), வலிப்புகள் அல்லது வேறு மோசமான அறிகுறிகள் (உதாரணம்: ஊசி குத்துவது போன்ற உணர்வு அல்லது விறைப்புத்தன்மை).
- Vaccine-Induced Prothrombotic Immune Thrombocytopenia (VIPIT) எனப்படும் மிக அரிதாக ஏற்படும் ஒரு பக்கவிளைவுடன் அஸ்ரா செனிக்கா/கோவிஷீல்ட் என்ற தடுப்பூசி தொடர்புடையது. தடுப்பூசி பெற்ற பின்பு பின்வரும் ஏதாவது அறிகுறிகள் உங்களுக்கு ஏற்பட்டால் தயவுசெய்து உடனடியாக மருத்துவ உதவியை நாடுங்கள்: மூச்சு விடுவதில் சிரமம், மார்புப் பகுதியில் வலி, கால் அல்லது கையில் வீக்கம் அல்லது குளிர்வு, நீடிக்கும் வயிற்று வலி, கடுமையான அல்லது மோசமாகிக்கொண்டு போகும் தலைவலி அல்லது பார்வைத் தெளிவின்மை, அல்லது பல இடங்களில் கன்றிப்போயிருத்தல், சிவப்பு அல்லது நாவல் நிற புள்ளிகள் அல்லது தோலுக்கடியில் இரத்தக் கொப்புளங்கள்.

## நான் பொதுமக்களுக்கான கோவிட்-19 பாதுகாப்பு முறைகளை தொடர வேண்டுமா?

- இந்த தடுப்பூசி கோவிட்-19 இலிருந்து உங்களைப் பாதுகாக்க மேலதிகமான ஒரு முறை. முதலாவது அல்லது இரண்டாவது கோவிட்-19 தடுப்பூசிக்கு பின்பும், முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைக் காத்துக்கொள்ளுதல் மற்றும் கைகளைக் கழுவுதல் போன்ற கோவிட்-19 பாதுகாப்பு நடவடிக்கைகளை நீங்கள் தொடரவேண்டும்.
- கோவிட்-19 க்கான அறிகுறிகள் இருக்கின்றனவா என்று கவனித்து, அந்த அறிகுறிகள் தொடர்ந்தால் பரிசோதனை செய்து பாருங்கள்.

## நான் இரண்டாவது தடுப்பூசியை எப்போது போடவேண்டும்?

- முழுமையான பாதுகாப்பைப்பெற தடுப்பூசி இரண்டு தரம் போடப்படவேண்டும். இது உங்களுடைய முதலாவது கோவிட்-19 தடுப்பூசியாக இருந்தால், கிளினிக்கில் சொல்கிறபடி அல்லது பதிவாளர்கள் சொல்கிறபடி இரண்டாவது ஊசியையும் பெற்றுக்கொள்ளுங்கள். அடுத்த தடுப்பூசிக்காக நீங்கள் வரும்போது இன்று தரப்பட்ட தடுப்பூசி ரசீது துண்டை மறக்காமல் கொண்டுவாருங்கள்.